# மெடிஷீல்டு லைஃப் பற்றி நீங்கள் அறிய வேண்டியவை




மெடிஷீல்டு லைஃப் என்பது பி2 அல்லது சி வகுப்பு படுக்கைப் பிரிவுகளின் பெருந்தொகை மருத்துவமனை கட்டணங்களுக்கும், அதிக கட்டணமுள்ள வெளிநோயாளி சிகிச்சைகளுக்கும், பொது மருத்துவ மனைகளின் கட்டணச்சலுகையுள்ள சிகிச்சைகளுக்கும் பணம் கட்ட சிங்கப்பூரர்களுக்கு உதவி வழங்கும் அடிப்படை காப்புறுதித் திட்டமாகும்.

நீங்கள் பி1 அல்லது ஏ வகுப்பு படுக்கைப்பிரிவில் அல்லது தனியார் மருத்துவமனையில் தங்கியிருக்க விரும்பினாலும், மெடிஷீல்டு லைஃப் திட்டத்தால் பயனடைவீர்கள். ஆனால், உங்களது மெடிசேவ் சேமிப்பிலிருந்தும் மற்றும் / அல்லது ரொக்கமாக நீங்கள் கூடுதல் தொகை செலுத்த நேரிடும்.

## தற்போது எனக்கு மெடிஷீல்டு காப்பீடு இருக்கிறதா?

உங்களுக்கு மெடிஷீல்டு காப்பீடு அல்லது மெடிசேவ் அங்கீகாரமுள்ள தனியார் ஒருங்கிணைந்த காப்புத் திட்டத்தின் காப்பீடு இருக்கிறதா என்பதைக் கண்டறிய:

***cpf.gov.sg*** இணைய பக்கத்திற்குச் செல்லவும்

> ***my cpf Online Services*** எனது மசேநி இணையச் சேவைகள் பகுதிக்குச் செல்லவும்

> ***"My Messages"*** எனது தகவல்கள் பகுதிக்குச் செல்லவும்

> ***"Insurance"*** உங்கள் சிங்பாஸ் மறைச்சொல்லைப் பயன்படுத்தி காப்புறுதி பகுதியைப் பார்க்கவும்.




மெடிஷீல்டு லைஃப்
உடல்நிலையைப் பொருட்படுத்தாமல்
**சிங்கப்பூரர்கள் அனைவருக்கும் வாழ்நாள் முழுவதும் மேம்பட்ட பாதுகாப்பு**
அளிக்கும்.



## மெடிஷீல்டு லைஃப் திட்டத்திற்கு எப்படி விண்ணப்பம் செய்வது?

நீங்கள் மெடிஷீல்டு லைஃப் திட்டத்திற்கு விண்ணப்பம் செய்யத் தேவையில்லை. சிங்கப்பூர் குடிமக்கள், நிரந்தரவாசிகள் அனைவரும், தற்போது மெடிஷீல்டு திட்டத்தின்கீழ் காப்பீடு பெற்றிருந்தாலும் பெறாதிருந்தாலும், 2015 கடைசியில் மெடிஷீல்டு லைஃப் திட்டம் அமலாகும் போது தானாகவே அத்திட்டத்தின்கீழ் காப்பீடு பெறுவார்கள்.

### உங்களுக்குத் தெரியுமா?



நோயாளிகளில் மூவரில் இருவர் மருத்துவமனையில் சேர்க்கப் படும்போது பி2 அல்லது சி வகுப்பு படுக்கைப் பிரிவுகளைத் தேர்ந்தெடுக்கிறார்கள்.

**அடுத்த வாரம், மெடிஷீல்டு லைஃப் திட்டத்தால் நீங்கள் எவ்வாறு பயனடைவீர்கள் என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள்!**

மெடிஷீல்டு லைஃப் பற்றி சுகாதார அமைச்சு உங்களுக்காகப் படைக்கும் எட்டு-பாகத் தொடரின் முதல் பாகம் இது.
மெடிஷீல்டு லைஃப் பற்றி மேல்விவரம் அறிய, www.medishieldlife.sg இணையப்பக்கம் பார்க்கவும்.

MINISTRY OF HEALTH
SINGAPORE

MediShield Life
Better Protection. For All. For Life.